6. அரசின் சட்ட முன்வடிவுகள்

(1) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

'சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்''
என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1964 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின்மீது உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 73 ( ) பிரிவின் கீழ் சட்டத்தின் தொடக்க நாளன்று இருந்த மலைத் தோட்டங்கள் அனைத்தும் உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்பட்டன. மூலச் சட்டம் செயலுக்கு வந்த நாள் 6—4—1960 ஆகும். எனவே 6—4—1960 அன்று மலைப் பகுதி அல்லாத ஏனைய ஒரு பகுதியில் இருந்த மலைத் தோட்டங்களுக்கு உச்ச வரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்பட்டன. தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு குறைத்தல்) சட்டத்தின் கீழ் (தமிழ் நாடு சட்டம் 17/1970) மூலச் சட்டத்தின் 3-ஆவது பிரிவைச் சேர்ந்த (11) பகுதியில் கண்டுள்ள "மேற்படி சட்டம் தொடங்கிய நாள்" என்ற சொற்றொடரின் பொருள் விளக்கம் மாற்றியமைக்கப்பட்டு அத் தொடக்க நாள் 1970 பிப்ரவரி 15 ஆம் நாளாக மாற்றப்பட்டது. இதன் விளைவாக 73 (vi) பிரிவில் குறிப்பிட்டுள்ள மலைத் தோட்டங்கள் குறித்த விலக்கு 15—2—1970 அன்று மலைப் பகுதி அல்லாத ஏனைய ஒரு பகுதியில் இருந்த மலைத் தோட்டங்களுக்குப் பொருந்துவதாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும். மலைப்பகுதிகளைப் பொறுத்தவரையில், மலைத் தோட்டங்கள் மேற்படி சட்டத்தின் 73 (v) பிரிவின் கீழ் முழு விலக்கு அனுபவித்து வந்தன. மலைப்பகுதி நிலம் குறித்த விலக்கு தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின்மீது உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 10/1972) 1972 மார்ச் 1 ஆம் நாள் முதற்கொண்டு ரத்து செய்யப் பட்டது. ஆகவே மலைத் தோட்டங்கள் குறித்த விலக்கு 6—4—1960 அன்று

@ 122–123 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 ஏப்ரல் 11] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இருந்த மலைத் தோட்டங்களுக்கு மட்டும் அளிக்கப்பட வேண்டுமா அல்லது 15—2—1970 அன்று இருந்த மலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிசிலனை செய்தது. இந்த விலக்கு 1960 ஏப்ரல் 6-ஆம் நாளன்று இருந்த மலைத் தோட்டங்களுக்கு மட்டும் அளிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அவ்வண்ணமே தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) 5-வது திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 10/1974) இயற்றப்பட்டது.

மலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்பட்ட விலக்கு 1960 ஏப்ரல் 6-ஆம் நாளன்று இருந்த மலைத் தோட்டப் பரப்புக்கு மட்டும் பொருந்தும் என்னும் கட்டுப்பாடு, மலைத் தோட்டத் தொழிலைப் பாதிக்கும் என்றும், மலைப் பகுதிகள் முழு விலக்கை அனுபவித்துக் கொண்டிருந்த கால அளவில் புதிய பகுதிகளில் மலைத் தோட்டங்களை விரிவுபடுத்தியவர்கள் இதனல் பாதிக்கப்படுகிருர்கள் என்றும் 1960 ஏப்ரல் 6-ஆம் நாளுக்குப் பிறகு மலைத் தோட்டங்களை விரிவு படுத்த முயற்சி மேற்கொள்ளாத மலைத் தோட்ட உரிமையாளர்கள் பாதிக்கப் படவில்லை என்றும் முறையீடுகள் வந்துள்ளன. மலைத் தோட்டங்களிலிருந்து அன்னியச் செலாவணி கிடைப்பதால் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு மலைத் தோட்டத் தொழிலுக்கு தனிச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று இந்திய அரசும் பரிவுரை செய்துள்ளது. எனவே, அரசு இதனைப் பரிசிலனை செய்து, தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு 17-ஆம் சட்டத்தினல் திருத்தப்பட்ட படியுள்ள மேற்படி சட்டத்தின் தொடக்க நாளாகிய 15—2—1970 அன்று மலைத் தோட்டங்கள் உச்ச வரம்பு சட்டத்தினின்று விலக்களிக்கப்பட வேண்டு மென்று முடிவு செய்துள்ளது. இதைத் தவிர, அவை நில வாரியத்தின் அனுமதியுடன் அத்தகைய மலைத் தோட்டங்களை அடுத்து அமைந்துள்ள அல்லது இடையிடையே அமைந்துள்ள நிலப் பரப்பில் மலைத் தோட்டத்தை விரிவுபடுத்தும் காரியத்திற்காக அல்லது மலைத் தோட்டத்தின் ஏனைய தொடர் பான காரியங்களுக்காக 1970 பிப்ரவரி 15-ஆம் நாளன்று இருந்த மலைத் தோட்டங்களின் பரப்பளவில் 20 சதவீதம் வரையில் உள்ளவையுமான கூடுதல் நிலங்களை, மேற்படி சட்டத்தின் 31-வது பிரிவின் கீழ் வைத்துக் கொள்ளவும் அவை தகுதியுடையவையாகும். மேற்படி நோக்கத்தை எய்துவது இச் சட்ட வரைவின் நோக்கமாகும்.

இப் பிரேரணையை இம் மேலவை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974)

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] **[1974 ஏப்ரல் 11**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. டி. கே. பொன்னுவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை நான் முழு மனதுடன் ஆதரித்து, வரவேற்கிறேன்.

நேற்றைய தினம் குறிப்பிட்டதைப் போலவே, நிலத்தைப் பொறுத்த வரையில், எந்த அளவிலே சீர்திருத்தம் செய்தாலும், அதை முழுமையாக ஆதரிக்க நான் முற்படுபவன். அந்த அளவிலே மட்டுமல்ல, நிலத்தைப் பொறுத்த அளவில், விவசாய நிலம் முழுமையாக தேசிய உடைமை யாக்கப்பட வேண்டுமென்று சொன்னாலும், உற்பத்திக்கு ஆபத்து எனினும், தான் அந்தத் தொழிலில் ஈடுபட்டதாலும், எனக்கும் நிலச் சொத்து இருப்ப தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனோபாவம் உடையவன் நான். அந்த அளவில் நிலச் சீர்திருத்தங்கள் அனைத்தையும் வரவேற்கப் பெரிதும் விரும்பு கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், 1947-ல் இது துவக்கப்பட்டு முதன் முதலாக சட்டமென்ற அளவில் 1961-ல் உருவாக்கப் பட்டு, 1960-லிருந்து 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து, கடந்த 15 வருஷங்களில் பல முறைகளிலே சீர்திருத்தம் என்னும் பெயரில் செய்து வருகிறோம். நேற்றைய தினம் குறிப்பிட்டதைப் போல, இன்னும் 15 வருஷங் களிலே அது முடிவடையக்கூடும், அல்லது பிரச்சினைகளை திசை திருப்ப 100 ஆண்டுகள் கூட ஆகலாம். ஆனால், இப்படி நீண்ட காலம் வரையில் சீர்திருத்தங்கள் அனைத்தும் இந்திய மண்ணில் வெறும் விவசாயத்தைப் பொறுத்த அளவிலேதான் என்பது தர்மமற்றது, நீதியற்றது, நியாயமற்ற தென்பதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். வருவாய் தரக்கூடிய எந்தத் தொழிலானாலும், பணப் புழக்கம் உள்ள எந்த நிலையானாலும், அவைகளுக்கு உச்சவரம்பு வந்துதான் தீர வேண்டும்.

நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயி மிகவும் சாதுவானவன்; பொறுமையின் சிகரம். சென்ற ஆண்டு மின் சக்தி 75 சதவிகிதம் வெட்டப்பட்ட நேரத்தில், அவனுடைய பயிர், பச்சையெல்லாம் கெட்டு, போட்ட பணமெல்லாம் மண்ணோடு மண்ணாகியது. அப்போது அவன் நிதானம் இழக்கவில்லை என்பது நாடு கண்ட ஒன்றாகும். ஆனால், அதே விவசாயி—அரக்கோணம் தாலூகாவில், திருத்தணி தாலூகாவில், காஞ்சீபுரம், மதுராந்தகம், உத்திரமேரூர் தாலுகாக்களில் இருபது நாட்களுக்கும் முன்னால் தொடர்ந்து 72 மணி நேரம் மின் சக்தி வராததன் விளைவாக ஈத்தேறிக் கொண்டிருந்த நெற் கதிர்கள் பாதிக்கப்பட்டு, 30, 35 சதவிகிதம் அவனுடைய உற்பத்தியும் பாதிக்கப்பட்ட நேரத்தில் விவசாயி வீதிக்கு வந்தான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்ட முன்வடிவின் பேரில் கருத்துச் சொல்லுங்கள். இது பொது விவாதமல்ல.

(பிற்பகல் 5-20)

திரு. டி. கே. பொன்னுவேலு: வீதிக்கு வந்த அவன் நீதி கோரினான், யாரும் அதற்குத் தூண்டவில்லை; தண்டோரா போடவில்லை. யாரும் அதற்குத் தலைமை வகிக்கவில்லை. யாரும் துண்டு நோட்டீஸ் போடவில்லை. ஆனால், விவசாயி வீதிக்கு வந்து நின்றான். ஓடிய ரயில்கள் நின்றன. பொருளீட்டித் தந்த பேருந்துகள் தடுத்து நிறுத்தப்பட்டன என்பதைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, விவசாயியினுடைய பொருளாதாரத்தில் சீர் திருத்தங்கள் தேவையற்றது, கூடாதது, ஆகாதது, அக்கிரமமானது என்று நான் கூறமாட்டேன். அவை நிச்சயம் செய்யப்பட்டாக வேண்டும். இன்றில்லா விட்டால் நாளை, அதற்கு முழுமையான சீர்திருத்தம் தேவை என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆனால், இந்தச் சீர்திருத்தத்தை விவசாயத்தில் ஆரம்பித்து, விவசாயத்திலேயே முடிக்கக்கூடாது என்பதனை நான் பணிந்து தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடிப்படையாக ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் இன்றைய தினம் ஸ்டாண்டர்டு எக்கரா என்று சொல்வதே, நான் ஏற்கெனவே ஆளுநர் உரையில் குறிப் பிட்டதுபோல, விவஸ்தையற்றது. விவகாரம் தெரியாதவர்கள் . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது பிளான்ட்டேஷன் பற்றியது. நீங்கள் நிலச் சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் என்ன ஆவது?

திரு. டி. கே. பொன்னுவேலு: நிலத்தைப்பற்றிய விவகாரமே தெரியாதவர்கள், களர் நிலத்திற்கும் களிம்பு நிலத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள், சேற்றுக் காலுக்கும் புழுதிக்காலுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள், ஸ்டாண்டர்டு ஏக்கராவைப்பற்றிய இலக்கணம் வகுத்ததைத் தவறு என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம் முன்னுள்ள சட்ட முன்வடிவைப் பொறுத்து அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய பிளான்டேஷனைப்பற்றி அரசு எடுத்துக்கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கை நிச்சயமாக வரவேற்கத் தக்கது; விரும்பத் தக்கது. எவ்வளவுதான் நிலங்களைக் குறைக்க வேண்டும் என்று சொன்னாலும், அந்த நிலம் பணம் ஈட்ட வேண்டிய ஒரு கருவி என்பதால், அது அந்நிய நாட்டுச் செலாவணியை நமக்குப் பெற்றுத் தருவது என்பதால், அதைப் பெரிய அளவிலே இன்றையதினம் உற்பத்தி செய்யவேண்டிய நிலை இருப்பதனால், இப்படிப்பட்ட சட்டம் தவிர்க்க முடியாத தேவையாகிறது. அப்படிப்பட்ட சட்டத்தை நான் வரவேற்கப் பெருமைபடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவிற்கு சம்பந்தமாகப் பேசுங்கள்.

திரு. டி. கே. பொன்னுவேலு: இனி பேசப்போவது சட்டத்திற்கு சம்பந்தமில்லாதது என்றாலும், என்னுடைய பேச்சு இதுவே கடைசிப் பேச்சாக இருக்கப் போவதால், துணைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து ஒரு விவகாரத்தைப்பற்றிப் பேச அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்தபோது நாட்டுப் பிரிவினையிலே ஆர்வம் கொண்டிருந்தவன். இன்னமும் அதிலே அசைக்க முடியாத நம்பிக்கை உடையவன். இன்றைய தினம் மாநில சுயாட்சிபற்றிப் பேசுகின்றோம். அதுபற்றி இந்த மன்றத்திலே விவாதிக்கின்ற நேரத்திலே நான் இருக்க மாட்டேன். ஆகவே, அதுபற்றி ஒன்றை நான் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணியில், டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இந்த மாநில சுயாட்சிக்காக எடுக்கக்கூடிய எந்த நடவடிக்கைக்கும் என்னையும் என்னுடைய எல்லா உடைமையையும் எந்த நேரத்திலும் எதற்கும் தருவதற்கு நான் சித்தமாக இருக்கின்றேன் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

1974 ஏப்ரல் 11]

* THIRU A. R. DAMODARAN : Sir, I rise to welcome this Bill which has been brought forth by the Hon. Minister I was one of those who, in those days when they wanted to bring in plantations also within the Ceiling Act, pointed out that plantations had to be considered differently from agricultural lands not only for the reason that had been given that the plantations earned foreign exchange but because of an even more important consideration, namely, that if we put a ceiling on plantations and if we got surplus land in plantations, there was no possibility of utilising the surplus land, by allotting it to the landless labourer or poor labourer, because plantation was an industry which required a great deal of investment and capital. Therefore, even at that time, we pointed out that it would be ruinous to the plantation industry, not only ruinous to the plantation industry and to the earning of foreign exchange but also ruinous to the labourers because no benefit would accrue to either the landless labourers or that class of cultivating tenants who would otherwise be benefited by a ceiling on agricultural land. I, therefore, welcome this provision. It has been made out as if this is a great concession. Actually what has been done in this Amending Bill is that whereas plantations under the 1960 Act were even then exempt from the ceiling provisions, all that this Government have done is that new plantations which have come up after 1960 are sought to be exempted from the ceiling area. If these new plantations also are now sought to be exempted, I think, from the point of view of the growth of plantations, we must also bear in mind that if there is a class of agricultural labourers which has benefited most by modern labour legislation, it is the plantation workers who today enjoy many benefits. The plantation labourer is entitled to medical relief and he is given housing facilities. I do not say that they are getting all that which they do not deserve. They deserve to get them. But, nonetheless, it cannot be gainsaid that they are in a better position than many of the poor agricultural labourers and landless labourers who are cultivating agricultural lands in the plains. The exemption of plantations will enable the good growth of these plantations not only from the point of view of the benefit of earning more foreign exchange but also from

the point of view of the agricultural labourers who are employed on these plantations. I believe that the relaxation from the ceiling operation would be of great benefit to the labourers and from this point of view also I welcome this Amending Bill, Thank you.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இப்பொழுது அவைமுன் விவாதத்திற்கு வந்திருக்கிற மசோதாவில், 1970 ஆம் வருஷத்தில் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, ஒருவர் மலைத் தோட்டத்தில் எவ்வளவு வைத்திருந்தாரோ, அந்த அளவுக்கு அவருக்கு விதிவிலக்குக் கொடுப்பதற்கு வகைசெய்வதற்காக இப்பொழுது இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இன்னும் ஒருபடி மேலே சென்று இதிலுள்ள கஷ்டத்தை அரசாங்கத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். கீழே plains பிளேன்ஸில் நன்செய் அல்லது புன்செய் நிலம் வைத்திருப்பவர்கள் 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குமேல் வைத்திருக்கக்கூடாது என்று எல்லோருக்கும் ஒரேமாதிரியாக, சமமாக ஒரு வரையறை செய்து சட்டம் நிறைவேற்றியிருக்கின்றோம். ஆனால், மலைத் தோட்டங்களைப் பொறுத்த வரையில், அம்மாதிரியில்லை. ஒரு உச்சவரம்பே கிடையாது. ஒருவர் ஆயிரம் ஏக்கர் வைத்திருக்கிறார். இன்னொருவர் 50 ஏக்கர் வைத்திருக்கிறார். ஒருவர் 15 ஏக்கரும் வைத்திருக்கிறார். நான் பல மலைத் தோட்டங்களைப் பார்த்திருக்கிறேன். இப்பொழுது அந்த 15 ஏக்கர் வைத்திருப்பவர் அதற்கு மேல் இனி மேல் வாங்கக்கூடாது என்று இந்தச் சட்டம் தடை செய்கிறது என எண்ணுகிறேன். 1970 ஆம் வருஷத்தில் திருத்தச் சட்டம் நிறைவேற்றியபோது அவர் எவ்வளவு வைத்திருந்தாரோ, அதற்குமேல் இருக்கக்கூடாது. இடையிடையே காலியிடம் இருந்தால் அதில் பயிர் செய்யலாம். எவ்வளவு நிலம் இருக்கிறதோ அதில் ஐந்தில் ஒரு பகுதி, அதாவது 20 சதவிகிதம், பிளான்டேஷன் போட்டுக்கொள்ளலாம். ஒருவர் 15 ஏக்கர் வைத்திருந்தாரென்றால், இன்னும் 3 ஏக்கர் அதிகமாக மலைத் தோட்டமாகச் சேர்த்துக்கொள்ளலாம். இதுதான் இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மற்றவர்கள் 500 ஏக்கர், 1,000 ஏக்கர் என்ற அளவில் வைத்திருக்கிறார்கள். ஒருவர் 50 ஏக்கர் வைத்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்குப் பக்கத்தில் இன்னொருவர் 15 ஏக்கர் வைத்திருக்கிறார். 15 ஏக்கர் வைத்திருப்பவர் போதிய நிதி வசதி இல்லாமல் சரியாக அந்தத் தோட்டத்தைப் பராமரிக்க முடியவில்லையென்றால், அதை அடுத்தாற்போல் இருக்கிற 50 ஏக்கரா வைத்திருப்பவருக்கு விற்றுவிட்டு வெளியே போக இப்பொழுது இடமில்லை. அதே நேரத்தில், அந்தத் தோட்டத்திற்கு ஒரு மைலுக்கு அப்பால் 500 ஏக்கர், 1,000 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தோட்டங்களும் இருக்கின்றன. இப்படி நிலைமை

இருக்கும்போது இவரை நாம் ஏன் கட்டுப்படுத்த வேண்டும்? பொதுவாக நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஏலத் தோட்டம், காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம் ஆகிய மூன்றுதான் முக்கியமாக இருக்கின்றன. இந்த மூன்றும் அந்நியச் செலாவணியை நமக்கு சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய தொழில்கள். இவற்றை வெறும் விவசாயம் என்று சொல்வதற்கில்லை. இவை தொழில்கள். ஆகவேதான் மத்திய அரசு இவற்றுக்கு 'லேண்ட் சீலிங்'கே கூடாது என்ற அபிப்பிராயத்தைச் சொல்லியிருந்தது, சொல்லிக்கொண்டும் இருக்கிறது. ஆகவே, நாம் கொண்டுவரும் திருத்தச் சட்டத்தில், இப்பொழுது இருக்கிறது அப்படியே இருக்கட்டும், அதிகப்படுத்தவேண்டாம் என்று சொல்வது நியாயமா? ஒருதலைப்பட்சமான தீர்ப்பாக அது அமையாதா என்று அறிய நான் விரும்புகிறேன். 50 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவன் அதோடு இருக்க வேண்டும், 1,000 ஏக்கர் வைத்திருப்பவன் அப்படியே வைத்துக் கொள்ளலாம், குறைக்கக்கூடாது என்றால், இது என்ன நியாயம்? இதை உடனடியாக இப்பொழுதே முடிவு செய்யவில்லையென்றாலும், இதை யோசிக்க வேண்டும். இது ஒரு நியாயமான குறை என்று அரசாங்கத்திற்குக் கூறிக் கொள்கிறேன். இதை யோசித்து பிறகாவது வழிசெய்யக் கேட்டுக்கொள் கிறேன்.

(பிற்பகல் 5-30)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, 6—4—1960 ஆம் தேதியில் எவ்வளவு இருந்ததோ அது பழைய சட்டத்திலேயே எக்செம்டெட். அதை விற்கக்கூடாது என்று எப்படி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்லுகின்றார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் சொல்லும் வாதம் சரியான வாதம்தான். ஒரு இடத்தில் ஒருவர் 500 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கின்றார். அவர் நன்றாக வாழ்கின்றார். இன்னொரு இடத்திலே வேறு ஒருவர் ஒரு 15 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறார். இவர் அதை வைத்துக்கொண்டு சரியாக வாழ முடியவில்லை. இவர் அதை விற்கலாம் என்றால், அவர் அதை வாங்க முடியாது. 20 சதவிகிதத்திற்கு மேலே அவர் விரிவுபடுத்த முடியாது. விற்கவும் முடியாது என்ற நிலையில் . . .

திரு. கே. ராஜாராம்: விற்கலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுதான் எனக்குத் தெரியவில்லை. அவர் ஒரு ஆயிரம் ஏக்கர் வைத்திருப்பதை விரிவுபடுத்துவதற்குத்தான் செக்ஷன் 31 எக்ஸெம்ப்ஷன். இதிலே ஏதாவது கஷ்டம் இருந்தால், அதைப்பற்றித் தனி யாக ஆராயலாம்.

[1974 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய விளக்கத்தைக் கொடுத்து விட்டார்கள். அநேகமாக இந்தச் சட்டத்தை எல்லோருமே வரவேற்றிருக் கின்றார்கள். எனவே, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள் ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. அதைத்தான் நான் சொன்னேன். அடுத்தவருடைய சிறிய தோட்டத்தை இவர் வாங்கிக்கொண்டால், ஏற்கெனவே இவர் வைத்துக்கொண்டுள்ள தோட்டத்தை இவர் விரிவுபடுத்துவதாகத்தான் அர்த்தம். விஸ்தீரணம் அதிகப்படுத்தப்படுகிறது. 100 ஏக்கர் இருக்கும் போது, பக்கத்தில் 15 ஏக்கர் வாங்கினல், அதற்குச் சட்டம் இடம் கொடுக்குமா என்பதில்தான் அச்சம் இருக்கின்றது. ஏனென்றல், 20 சதவிகிதம் வரையில் அதிகப்படுத்தலாமே தவிர, மேற்கொண்டு அதிகப்படுத்த இடமில்லை என்று சட்டத்தில் இப்போது சொல்லியிருக்கிறோம். இந்தச் சட்டத் திருத்தத்திலும் இருக்கின்றது. அப்படி இருக்கும்போது 50 அல்லது 100 ஏக்கர் வாங்குவது என்றல், எப்படி இடம் கொடுக்கும் என்ற சந்தேகம் இருக்கின்றது. இந்தச் சங்கடத்தைத் தீர்க்க வேண்டுமானல், வேறு ஒரு திருத்தத்தின் மூலமாவது இதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஏற்பட்டிருந்தால் 73-வது பிரிவின்படி

"All plantations in existence on the date of the commencement of this Act are exempted" யாருக்கு வேண்டுமானலும் விற்கலாம். ஆனல் 31-வது பிரிவுப்படி நிலை வேறு. அது வேறு ஒரு பிரிவு. 1,000 ஏக்கர் இருந்தால், அதை எப்படி விஸ்தரிக்கப்போகிறீர்? வேறு ஒரு இடத்தில் வாங்காமல்? அதே நபர் வேறு ஒரு இடத்தில் ஒரு ஆயிரம் ஏக்கர் வாங்கக் கூடாது என்று இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிக் கஷ்டம் இருந்தால் . . .

திரு. கே. ராஜாராம் : அதற்காகத்தான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுவரையில் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 31-வது பிரிவிற்குள் ஒரு ஆயிரம் ஏக்கருக் குள்ளாக அல்லது 'கண்டிகுஅஸ்'—அதற்கு 20 சதவிகிதத்திற்கு மேலே போகக் கூடாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) நிறைவேற்றப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,